
# சங்கரானந்தம்-25

## 16.12.2025





காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்


தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்

104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.

99404 47 437



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்

# சங்கரானந்தம் - 25 நாள் : 16-12-2025



நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்திகளாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி பெரியவாளையும் மனதார வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

★ சங்கரானந்தம் - 01 வெளியான நாள் : 29.12.2013
★ சங்கரானந்தம் - 24 வெளியான நாள் : 10.06.2025

**சங்கரானந்த கானங்களை**
**www.soundcloud.com / madambakkamshanks**
மற்றும்
**www.soundcloud.com/lakshmikanthan-shankar**
ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்தபட்சம் ரூ.100/- அளிப்பவர்களுக்கு இப்புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின்பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:


## தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.

**✆ 99404 47 437**

**(8.00 - 10.00 pm. only)**


சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

## ஆதங்கம் தீர்த்தரு ளும்
## அனுஷ நாத குரு கானம்

### (பிரம்மமுராரி - மெட்டு)

அத்வைத குருவே ஆதித்ய திருவே
சத்திய திருவே சாத்வீக குருவே
எத்திக்கும் காத்திடும் ஏகம்ப திருவே
முத்தமிழ் போற்றிடும் மும்மூர்த்தி திருவே



ஆயிரம் நாமம் கொண்டருள் சங்கரா
ஆயிரம் தலம் கண்டஆதி சங்கரா
ஆயிரம் மலையமர் ஸ்வாமிநாத சங்கரா
ஆயிரம் பிறைகண்ட ஸ்ரீ சந்திர சேகரா

ஆனந்த தாண்டவ நாட்டிய சங்கரா
ஆனந்த தென்முக ஆலடி சங்கரா
ஆனந்த ஆறுமுக ஸ்வாமிநாத சங்கரா
ஆனந்தத் திருமுக ஸ்ரீ சந்திரசேகரா

ஆகமம் போற்றிடும் ஜோதி சங்கரா
ஆறு மதம் தந்த ஆதி சங்கரா
ஆறிரு விழிகளால் அருள் ஸ்வாமிநாதா
ஆறோடு பத்தருள் ஸ்ரீ சந்திரசேகரா

# கருணைமாக் கடல்
# காஞ்சி மாமுனி கானம்

## (பூமியில் மானிட ஜென்மம் எடுத்தமோர் - மெட்டு)

கல்லாலின் கீழ் அமர் கருணா ஸாகரா
கல்லாதோர் கற்றோர்க்கும் அருணனாய் அருள்பவா
கல் மனம் கரைத்தேஆட்கொண் டருள்பவா
கல்லாலின் திருவே திருக்காஞ்சி சங்கரா



கற்பனைக் கெட்டாத கயிலாய வாஸனே
கற்சிலையாய் அருள் கார்மேக ரூபனே
கற்கண்டாய் இனித்திடும் வாழ்வருள் பவரே
கற்பூரமாய் வினைகரைத் தருள்குருவே

கச்சி மூதூர் உறை காமாக்ஷி நாதனே
கச்சியம் பதிஉறை ஏகம்ப நாதனே
கச்சக மனதினை அடக்கிட அருள்வீர்
கச்சபேசன் நிழல் அமர்ந்தருள் குருவே (கச்சகம் - குரங்கு)

கண்டம் கருத்திட்ட நஞ்சண்ட கண்டனே
கண் இமையாய் காக்கும் திருநீலகண்டனே
கண் கண்ட தெய்வமே திருக்காஞ்சி தெய்வமே
கண் காணா கயிலை சேர்த்தருள் தெய்வமே

## குறைகள் தீர்த்தருளும்
## குரு காஞ்சி மாமுனி கானம்


### (பிடிகிடதலம்ரால பெல்லி கூத்துரு - மெட்டு)

நொடியினில் வரமருள்வார் மஹா ஸ்வாமியே
நாடி வந்தோர் குறை தீர்த்தருள்வார் மஹா ஸ்வாமியே

வெண் காளை வாகனனே சைலேஸ்வரரே
வெண் திங்கள் அணிந்தருளும் மௌலீஸ்வரரே
வெண் நிலவாய் அமர்ந்தருளும் வேத நாதரே - மூவிரல்
வெண்ணீறோ டமர்ந்தருளும் விஸ்வ நாதரே

கண் மூன்று கொண்டருளும் காளத்தி நாதரே
கண் இரண்டால் இரவு பகல் அருளும் ஈஸனே
கண் இமையாய் காத்தருளும் காஞ்சி நாதரே - ஞான
கண் திறந்தே வரமருளும் அனுஷ நாதரே

அண்டம் காக்கும் நீலகண்ட நடராஜனே
அண்டமெங்கும் அமர்ந்தருளும் லிங்க ராஜ(ரூப)னே
அண்டி வந்தோர் குறை தீர்க்கும் ஆறுமுகனே
அண்டம் போற்றும் ஸ்வாமிநாத அனுஷ நாதரே



## கழல் பணிந்தோர்க்கருள்புரியும்
## காஞ்சி மாமுனி கானம்

(அன்புருவம் ஆனவரே ராகவேந்திரா - மெட்டு)

சங்கர குரு சுந்தர குரு மஹாபெரியவா
சங்கடங்கள் தீர்த்தருளும் மஹாபெரியவா
மங்கல குரு மாதவ குரு மஹாபெரியவா - சுப
மங்கலங்கள் தந்தருளும் மஹாபெரியவா



கல்லாலின் கீழமர்ந்த குரு மா மூர்த்தி
காஞ்சியில் அமர்ந்தருளும் கருணா மூர்த்தி
கிட்டிடவே பேரின்பம் சங்கரகுருவே - நின்
கீர்த்திகளை பாடிடவே அருள்வீர் குருவே

குமரனாய் வந்திட்ட ஸ்வாமிநாதரே
கூவி அழைக்க வரமருளும் பூமிநாதரே
கெடில நதியில் குருவை கண்ட சங்கர குருவே
கேட்ட வரம் தந்தருளும் சங்கர குருவே

கை குவித்தோர்க் கருள் சிவமே சந்திர சேகரா
கொற்றவனாய் காத்தருளும் மஹா பெரியவா
கோடி சந்திர பிரகாஸரே சங்கர குருவே
கௌபீன தண்டதாரி சங்கர குருவே

## ஆலடி சங்கர காலடி சங்கர
## கலவை சங்கர காஞ்சிமஹாஸ்வாமி கானம்

### (ஆரத்தி திரைக்கடல் அரசனே உனக்கு - மெட்டு)



காஞ்சியில் அமர்ந்தருள் கருணா ஸாகரா
காலடி பணிந்தோம் காத்தருள் சங்கரா

காரிருள் போக்கிடும் கதிரவத் திருவே
காமகோடி பீடத்தின் காவியத் திருவே
காலடி சங்கராஆதி குரு சங்கரா
காலமெல்லாம் எம்மை காத்தருள் சங்கரா

காற்றாய் வந்தருள் காளத்தி நாதனே
காலங்கள் கடந்தருள் அருணாச் சலனே
காவிரி கரையின் ஜம்புகேஸ்வரனே
காலமெல்லாம் எம்மைகாத்தருள் சங்கரா

காஞ்சியில் அமர்ந்தவா காமாக்ஷி சங்கரா
காசி விஸ்வேஸ்வரா விசாலாக்ஷி சங்கரா
கால கால சங்கரா காமகோடி சங்கரா
காலமெல்லாம் எம்மை காத்தருள் சங்கரா

## அபயம் அருள் காஞ்சி குரு
## காமகோடிபீட குரு மஹா பெரிய வாகானம்

### (ஹரிவராசனம் - மெட்டு)



ஆதி சங்கரா அத்வைத சங்கரா
ஜோதி சங்கரா ஜெகத் குரு சங்கரா

ஆதி சங்கரா ஆலடி குரு சங்கரா
ஆதி காஞ்சியின் குரு சந்திரசேகரா

மதி முக திருவே மாதவ திருவே - பிறை
மதி அணி திருவே மௌலீஸ்வர திருவே

நதியாய் எங்கும் நடந்திட்ட குருவே - ஞான
நிதியாய் நெஞ்சில் நிறைந்திட்ட குருவே

பதி எங்கும் அமர்ந்தே அருள் பார்வதி சிவமே - திருப்
பதிகங்கள் தந்தே பாதை காட்டிய பரமே

புதிதாய் விடியல் நித்தம் அருளும் சிவமே - ஞான
புதினமாய் நெஞ்சில் நிறைந்தருள் பரமே

அதிசயம் புரிந்தே அருள் அனுஷ நாதரே
விதி தனை மாற்றும் கா(ஞ்)சி விஸ்வநாதரே

பதித்திட நெஞ்சில் அத்வைத சாரமே - உம்மை
துதித்திட அருள்வீர் நடமாடும் தெய்வமே

## குறைகள் தீர்த்தருளும்
## குரு காஞ்சிமாமுனி கானம்

### (பாக்கியாத லக்ஷ்மி பாரம்மா - மெட்டு)

ஆனந்த அற்புத அதிசயமே
திருக்காஞ்சி மாமுனி
பிருந்தாவன காருண்ய தரிசனமே



கண் கண்ட தெய்வத்தின் காலடி பணிவோம் - இரு
கண் பெற்றபலனை மனதில் உணர்வோம்
கண் இமைக்காதமர்ந்தருளும் குருவின்
கண் ஒளிபெறுவோம் கவலைகள் தீர்ப்போம்

மண் வந்தமாமலை சிவனின் திருவே - ஆதி
மண் வந்து அமர்ந்திட்ட சங்கரகுருவே
மண்ணுலகெங்கும் நடந்திட்டகுருவே - காஞ்சி
மண் அமர்ந்தருளும் தெய்வத்தின் திருவே

பெண்ணோர் பாகனாய் அருளும் திருவே - செவிலிப்
பெண்ணாய் காவிரிகடந்திட்டதிருவே
வெண் காளை வாகன வேதத்தின் திருவே - குளிர்
வெண்ணிலவாய் அமர்ந்தருளும் குருவே

## வாடிவந்தோர் வாட்டம் போக்கும்
## குரு காஞ்சி மாமுனி கானம்

### (காயத்ரி மந்திர - மெட்டு)

தேடியே வந்தருள் தெய்வமே - மனம்
நாடிய தருளும் தெய்வமே
வாடியே வந்தோர்க் கருள் குருவே - நின்புகழ்
பாடியே பணிந்தோம் ஜெகத் குருவே

பூவடி பணிந்தோம் புண்ணியரே - மனக்
காவடி ஆடியே பணிந்தோமே
சேவடி பணிந்தோம் சங்கரரே - மண்ணில்
மூவடி கொண்டருள் சங்கரரே



வேண்டிய தருளும் வேதியரே - மனம்
வேண்டிட அருள்வீர் ஞானியரே
கண்டிட தரிசனம் காஞ்சியிலே - பேருண்மை
கண்டிட அருள்வீர் நெஞ்சினிலே

கோடி சூர்ய பிரகாஸரே - சத
கோடி யுகங்கள் கண்டவரே
கூடியே பணிந்தோம் குரு நாதா - ஞானம்
கூடிட அருள்வீர் ஜெகந் நாதா

## அத்வைத பீடம் உறை

## அனுஷ நாத குரு கானம்

### (ஏதீருக நனு - மெட்டு)



ஹரஹர சங்கர அத்வைத சங்கர
ஜெயஜெய சங்கர ஜெகத் குரு சங்கர
சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி நாத சங்கர
சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கர

அருள் மழை பொழிந்தருள் அருணாச்சலனே
அருஉரு சிவனேஅகிலாண்டேஸனே
அருங்குணநாதனே அர்த்த நாரீஸனே
அருட்காட்சி நல்கிடும் அத்வைத நாதனே

அருணனாய் தினமருள் அக்னி லிங்கேஸனே
அகிலத்தை காத்திடும் அம்பல வாணனே
அர்த்த நாரீஸனே அர்ச்சாவதாரனே
அத்வைதம் உணர்த்திடும் அம்புலி முகத்தனே

அக்னீஸ்வரனே அருளாழீஸனே
அம்பலத் தரசனே அம்பிகை நாதனே
அர்ச்சாவதாரனே அருள்மொழி நாதனே
அம்புலி ஒளியருள் ஆபத் சஹாயனே

அருளாழீஸனே அழகேஸ்வரனே
அம்பிகை மனம் கொண்ட அனந்தேஸ்வரனே
அருள்மொழி தினம் தந்த அர்ச்சுன நாதனே
ஆபத்தில் காத்திடும் அதுல்ய நாதனே

## சங்கடங்கள் தீர்த்தருளும்
## சங்கர குரு மஹா ஸ்வாமி கானம்

### (நாத விந்து கலாதி நமோ நம - மெட்டு)

சங்கரகுருவே சங்கர குருவே
ஷண்மத திருவே ஷண்முக திருவே
சந்திர மௌலீஸ்வர சந்திர சேகர மஹா ஸ்வாமி

ஸ்வயம் பிரகாஸனே ஸ்வாமி நாதனே
விஸ்வ நாதனே பஸ்ம தாரனே
அஸ்வத்த விருக்ஷ அனுசுயாத்ரி புத்ரனே மஹா ஸ்வாமி

தக்ஷிணாமூர்த்தியே சின்முத்ர மூர்த்தியே
தக்ஷிண கைலாய நடராஜ மூர்த்தியே
தக்ஷிண திக்பால சம்ஹார மூர்த்தியே மஹா ஸ்வாமி

அவதார நாதா ஆதி சங்கரா
அவ்யாஜ கருணா மூர்த்தி சங்கரா
அவனியை வலம் வந்த காஞ்சி சங்கரா மஹா ஸ்வாமி

அனல்உரு சிவமே ஆதி பரமே
அன்போடான்மிகம் உணர்த்திய பரமே
அனவரதம் அடி பணிந்திட அருள்வீர் மஹா ஸ்வாமி

அபய கரத்தனே ஆனந்த கூத்தனே
அஜபா நடன தியாக ராஜனே
அடி பணிந்தோர்க்கருள் நடமாடும் தெய்வமே மஹா ஸ்வாமி

## சமயத்தில் காத்தருளும்
## காஞ்சி சங்கர குரு கானம்

### (மலர்கள் நனைந்தன பனியாலே - மெட்டு)

கழல் பணிந்தோர்க்கருள் கருணேஸா - நின்
நிழல் பணிந்திடவே அருள் ஈஸா
சுழல் துன்பம் போக்கிடம் விஸ்வேஸா - பொன்
கழல் நிதம் பணிந்திட அருள் ஈஸா



சங்கர குருவே சர்வேஸா - ஆதி
சங்கர திருவே காஞ்சீஸா
சங்கம திருவே பரமேஸா - மன
சங்கடம் தீர்த்திடும் குரு ஈஸா

மங்கல நாதரே மருந்தீஸா - சுப
மங்கலம் அருளும் சித்தேஸா
மங்காப் புகழ் கொண்ட வைத்தீஸா - அஷ்ட
மங்கலம் நிதமருள் தியானேஸா

திங்கள் திருநெற்றி மௌலீஸா - வெண்
திங்கள் முகத்தனே வடிவீஸா
திங்களூர் திருவே சந்திரேஸா - மனதில்
திங்களாய் ஒளியருள் குரு ஈஸா

## ஆதி ஸ்வாமிநாத அனுஷ குருநாத கானம்

### (ராமச்சந்திராய ஜனக - மெட்டு)



ஆதி சிவசங்கரனே மஹா பெரியவா
ஆதி குரு சங்கரரே மஹா பெரியவா
ஆதி ஸ்வாமிநாதனே மஹா பெரியவா
ஆதிக்ஷேத்ர காஞ்சிவாஸ மஹா பெரியவா

ஆலாலம் உண்ட சிவனே மஹா பெரியவா
ஆலடியின் குரு நாதா மஹா பெரியவா
ஆறு முக ஸ்வாமிநாத மஹா பெரியவா
ஆதிக்ஷேத்ர காஞ்சி வாஸ மஹா பெரியவா

ஆடல் புரிந்தருள் சிவமே மஹா பெரியவா
ஆனந்த தென்முகத்தனே மஹா பெரியவா
ஆறுமுக வேலவனே மஹா பெரியவா
ஆதிக்ஷேத்ர காஞ்சி வாஸ மஹா பெரியவா

ஆகாஸ லிங்கரூப மஹா பெரியவா
ஆனந்த தவக் கோலம் மஹா பெரியவா
ஆறுதலை அருள் குஹனே மஹா பெரியவா
ஆதிக்ஷேத்ர காஞ்சி வாஸ மஹா பெரியவா

## சஞ்சலங்கள் தீர்த்தருளும்
## சங்கர குரு கானம்

### (பாஹிராமப் பிரபோ -மெட்டு)

அருந்தவத் திருவே ஆதிரை திருவே
பெருந்தவத் திருவே பரப்பிரம்ம திருவே
வருந்தி வந்தோர்க் கருள் வான் தில்லை திருவே
அருமருந் தாயருள் ஆதிசிவத் திருவே

கருணையோ டாட்கொள்ளும் காருண்ய பரமே - செங்
கரும்பாய் வாழ்வருளும் நீலகண்ட சிவமே
கரும்பாறை மனதிலும் குடிகொள்ளும் ஈரமே
கருவறை கொண்டருளும் திருக்காஞ்சி தவமே (நெஞ்சில்)

உரு பல கொண்டருளும் ஊர்த்துவத் திருவே
உருகியே பணிபவர் துயர் தீர்க்கும் திருவே
உருமாறி அருள் சுரக்கும் அத்வைத திருவே
உருகொண்டு வந்திட்ட திருக்கயிலை திருவே



திருக்காஞ்சி வந்திட்ட தீவண்ண திருவே
திருக்காட்சி தந்தருளும் பெருஞ்சோதி திருவே
திருப்பங்கள் வாழ்வினில் தந்தருளும் திருவே
திருத்தியே தலைவிதியை உடனருளும் திருவே

## ஆதிசங்கர அவதார
## ஸ்வாமிநாத குரு சங்கரகானம்

### (நாதர் முடிமேல் இருக்கும் - மெட்டு)



ஆதி காஞ்சி சங்கரரே மஹா ஸ்வாமி
ஆதி தவக் கோலகா மாக்ஷியே மஹா ஸ்வாமி
ஆதி குமர கோட்டத்தின் ஸ்வாமிநாதனே
ஆதி சர்வக்ஞ பீடம் அமர் மஹா ஸ்வாமி

ஆதிரையின் நாயகனே மஹா ஸ்வாமி - திவ்ய
அனுஷத்தின் நாயகரே மஹா ஸ்வாமி
ஆதி குரு சங்கரரே மஹா ஸ்வாமி - பக்த
அனுக்கிரஹ நாயகரே மஹா ஸ்வாமி

ஆலடியின் ஆதி குரு மஹா ஸ்வாமி - நொடியில்
அலமலந்தோர்க் கருள் குருவே மஹா ஸ்வாமி
ஆலமுண்ட நீலகண்ட மஹா ஸ்வாமி - மனதின்
அவலங்கள் தீர்த்தருளும் மஹா ஸ்வாமி

ஆறுமுக வேலவனே மஹா ஸ்வாமி - பக்தி
அறம் வளர்க்க வந்தவரே மஹா ஸ்வாமி வளர்க்க வந்தவரே
ஆறுதலை அருள் குருவே மஹா ஸ்வாமி - பிறவி
அறுபடவே வரமருள்வீர் மஹா ஸ்வாமி

## ஆனந்த வாழ்வருளும்
## அத்வைத குரு மஹா பெரியவா கானம்

### (நீதானா எனை அழைத்தது - மெட்டு)



மும்மூர்த்தி ரூபனே சங்கரரே
முத்தொழில் புரிந்தருள் சங்கரரே
மும்மலம் போக்கிடும் சங்கரரே
முன்வினை தீர்த்திடும் சங்கரரே

ஆலடி அமர்ந்தருள் ஆனந்த குருவே
அத்வைத பீடத்தின் தவத் திருவே
ஆனந்தம் உணர்த்திடும் நாட்டியத் திருவே
அனவரதம் காத்தருள்வீர் குருவே

காம தஹன சிவத்ரி நேத்ர திருவே
கமண்டலம் ஏந்தியதவத் திருவே
காமகோடி சந்திர மௌலீஸ திருவே
கச்சி மூதூர் உறை சங்கர குருவே

சாம்ப சதா சிவசங்கர திருவே
சந்திரசேகர தவத் திருவே
சாந்தமாய் அமர்ந்தருள் கற்பகத் தருவே
சந்ததம் காத்திடும் சங்கரகுருவே

## சாந்தமாய் அமர்ந்தருளும் சாம்ப சதாசிவ
## காஞ்சி மாமுனி கானம்

### (அம்மே நாராயணாதேவி நாராயணா - மெட்டு)



சம்போ சிவசங்கரா ஸ்வாமிநாத சங்கரா
சாந்தமூர்த்தி சங்கரா ஸ்ரீ சந்திர சேகரா

அஞ்ஞான இருள் விலக அத்வைத ஒளி பெருக
அவனி எங்கும் நடந்தவா அவ்யாஜ கருணாகரா



ஆதி குரு சங்கராஆலடி குரு சங்கரா
ஆபத்தில் காப்பவா ஆத்ம பந்து சங்கரா

இருள் போக்கும் ஆதவா இடர் நீக்கும் மாதவா
இதமருளும் ராகவா இமயம் உறை ஈஸ்வரா

ஈர்த்தாட் கொண்டருள்பவா ஈரெட்டும் அருள்பவா
ஈடில்லா புங்கவா ஈஸ்வர சிவ சங்கரா

உற்ற துணை ஆனவா உள்ளொளியாய் ஒளிர்பவா
உலகெங்கும் அருள்பவா உள்ளத்தில் நிறைந்தவா

ஊன்றுகோல் ஆனவா ஊறுகளை களைபவா
ஊற்றாய் பத்தி பெருகிடவே ஊழ்வினை களைபவா

எத்திசையும் நிறைந்தவா எங்கும் அமர்ந்தருள் பவா
எளியோர்க் கருள் சங்கரா எம் இறையே சங்கரா



ஏங்கி நின்றோர்க் கருள்பவா ஏக்கங்கள் தீர்ப்பவா
ஏகம்பன் நிழலமர்ந்த ஏகாந்த சங்கரா

ஐவிரலால் அருள்பவா ஐந்தெழுத்திற்க் குரியவா
ஐம்பூத நாயகா ஐஸ்வர்யம் அருள்பவா

ஒன்றே குலம் என்றவா ஒப்பில்லா பெரியவா
ஒருதண்டம் கையில் கொண்டே பேரண்டம் காப்பவா

ஓதிடவே நின் நாமம் ஓயா தருள் சங்கரா
ஓங்கார குருபரா ஓரிக்கை ஆண்டவா

ஔஷத கிரி ஈஸ்வரா கௌரி பரமேஸ்வரா
சௌபாக்கியம் அருள்பவா காஞ்சி மஹா பெரியவா


சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.100/-** அளிப்பவர்களுக்கு இந்த வெளியீடு தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் Pdf / Whatsapp-ல் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு சமீபத்திய மூன்று வெளியீடுகள் மற்றும் 250 சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்

## காஞ்சியில் அமர்ந்தருளும் கருணா ஸாகரமாமுனி கானம்

### (ராகம் - ஸ்ரீ ராகம்)



காஞ்சியில் அமர்ந்தருள் காருண்யரே
நெஞ்சில் குடிகொண் டருளும் சங்கரரே

செஞ்சடைசிவனாய் அருள் குருவே - மன
சஞ்சலம் தீர்த்திடும் ஜெகத் குருவே

விழுப்புரம் தலத்தினில் பிறந்தவரே - பக்தர்
கழுபிணி தீர்த்திட வந்தவரே

முழுமதி வதனமோடருள் குருவே - உம்மை
தொழுதோர் துயர் தீர்க்கும் ஜெகத் குருவே

கலவையில் குருவாய் அமர்ந்தவரே - ஞானக்
கலவையின் நிழலை தொடர்ந்தவரே

பால பருவத்து ஸ்வாமிநாத திருவே - ஞான
பாலமாய் பரம் சேர்க்கும் ஜெகத் குருவே

குடந்தையில் குருவாய் அமர்ந்தவரே - காஞ்சி
மடத்தின் குருவாய் வளர்ந்தவரே

விடமுண்ட கண்டனாய் திகழ்ந்தவரே - ஞான
தடந்தனில் பக்தரை சேர்த்தவரே

தேசம் எங்கும் நடந்தவரே - பக்தி
நேசத்தை மனதினில் விதைத்தவரே

ஈசனாய் காட்சியே தந்தவரே - அத்வைத
வாசத்தை எங்கும் விதைத்தவரே

## அடி பணிந்தோர்க்கருள்
## ஆதி சிவசங்கர குரு கானம்

### (சக்கனி தல்லிக்கி சாங்கு பலா - மெட்டு)



காஞ்சியில் அமர்ந்தருள் சங்கரரே - மன
சஞ்சலம் தீர்த்திடும் சங்கரரே
சங்கரரே காஞ்சி சங்கரரே
சங்கரரே சந்திர சேகரரே

ஆடிய பாதமே ஆனந்த சிவமே
அடிமேல் அடி வைத்து நடந்தெங்குமே
அடியார் குறை தீர்த்தருள் புரிந்தாரே
அடி பணிந்தோர் வினை தீர்த்தாரே

வாடிய முகம் கண்டு வாடி நின்றாரே
வடியாத் துயர் தனை தீர்த்தாரே
வடிவேல் தண்டமோடெங்கும் நடந்தே
விடியலை தந்தார் ஸ்வாமிநாதரே

கொடி கவி பெற்றிட்ட அம்ப ல பாதமே
குடி கொண்டு நெஞ்சினில் அருளிடுமே
நாடியே பணிந்திட நடமாடும் தெய்வமே
நொடியினில் வரங்கள் அருள்வாரே

## அபயம் அருள் காஞ்சி குரு
## மஹா பெரியவா கானம்

### (ரகுபதி ராகவ ராஜாராம் - மெட்டு)

அத்வைதம் உணர்த்திட வந்தவராம்
ஆனைமுகன் சோதரன் ஸ்வாமி நாதராம்
இக பரம் உணர்த்திட வந்தவராம்
ஈடில்லா குரு சந்திர சேகரராம்



உண்மையை உரைத்திட வந்தவராம்
ஊர் தோறும் வலம் வந்த ஸ்வாமி நாதராம்
எண் திசை நடந்திட்ட யதி ராஜராம்
ஏகாந்தமனம் கொண்ட சங்கரராம்

ஐயங்கள் தெளிவிக்க வந்தவராம்
ஒப்பிலா குரு வழி நின்றவராம்
ஓதிட நாமங்கள் மகிழ்பவராம் - மன
ஔவியம் களைந்தே அருள்பவராம்



கண் கண்டதெய்வமாய் அமர்ந்தவராம்
காருண்ய கடலாய் அருள்பவராம்
கிழக்கின் ஒளியாய் ஒளிர்பவராம்
கீதையின் பாதையில் சேர்ப்பவராம்

குறைகள் மன்னிக்கும் குணத்தவராம்
கூர் விழியால் குறை தீர்ப்பவராம்
கெடு வினை தீர்த்தே அருள்பவராம்
கேட்கும் முன் ஈரெட்டும் அருள்பவராம்

கைவிடா தருளும் வைத்தியராம்
கொடும் விஷம் அருந்திய சிவனாராம்
கோரிய வரங்கள் அருள்பவராம்
கௌரீஸ்வர ரூப குருபரராம்

## பாத கமலங்களை போக்கும்

## பாத கமல துதி கானம்

### (பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம் - மெட்டு)



காஞ்சிமா முனியின் பொற்பதம் பணிவோம்
காமகோடி பீடத்தின் மலர் பதம் பணிவோம்
காலடி பதித்திட்ட குரு பதம் பணிவோம்
காருண்ய சங்கர சன்னதி பணிவோம்

அற்புதம் நிகழ்த்திடும் பொற்பதம் பணிவோம்
ஆனந்தம் உணர்த்திடும் மலர் பதம் பணிவோம்
இன்னல்கள் தீர்த்திடும் குரு பதம் பணிவோம்
ஈடில்லா சங்கர சன்னதி பணிவோம்

உண்மையின் உறைவிட பொற்பதம் பணிவோம்
ஊர்தோறும் நடந்திட்ட மலர் பதம் பணிவோம்
எட்டிரண் டருளிடும் குரு பதம் பணிவோம்
ஏகாந்த சங்கர சன்னதி பணிவோம்

ஐந்தினை அடக்கிட பொற்பதம் பணிவோம்
ஒல்வினை தீர்த்திடும் மலர் பதம் பணிவோம் தீர்த்திடும்
ஓயாதே வரமருள் குரு பதம் பணிவோம்
ஔஷத தரிசன சன்னதி பணிவோம் (பவ)

## திருக்காஞ்சியில் அமர்ந்தருளும் திருக்கயிலை நாதர் மஹா பெரியவா கானம்

### (நாதஸ்வர ஓசையிலே - மெட்டு)

ஓரிருக்கை கொண்டவரே ஸ்வாமிநாத சங்கரரே
ஓரிக்கை தலம் அமர்ந்த ஸ்ரீ சந்திரசேகரரே

ஹரி ஹரனாய் வலம் வந்த ஆதி குரு சங்கரரே
பரிவுடனே பாமரர்க்கும் பரம் உணர்த்திட வந்தவரே
கோரிக்கை நிறைவேற்றும் காமதேனு கற்பகமே - அர்த்த
நாரியாய் அமர்ந்தருளும் அத்வைத குரு பரமே

கரிமுகனை தந்திட்ட கேதார சங்கரரே
கிரி எங்கும் அமர்ந்தருளும் சந்திர மௌலீஸ்வரரே
காரியசி த்தி அருள் காமாக்ஷி தாஸரே
கோரிய வரம் அருளும் அத்வைத குரு பரமே

சூரிய சந்திரனை விழியாகக் கொண்டவரே
நேரிடும் துன்பம் தன்னை நொடியினில் தகர்ப்பவரே
போரிடும் மனம் தந்தே மெய் வழி உரைப்பவரே
பாரினில் பாவத்தை கரைத்திடவே அருள்பவரே



## ஜெகம் புகழும் ஜெகத்குரு
## ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி குருகானம்

### (சிட்டுக் குருவி சிட்டுக் குருவி - மெட்டு)

சங்கர குரு சங்கர குரு மஹா பெரியவா - ஆதி
சங்கர குரு அவதார மஹா பெரியவா
சங்கர குரு ஸ்வாமிநாத மஹா பெரியவா - காஞ்சி
சங்கர குரு ஜெகத்குரு மஹா பெரியவா

ஜெகம் புகழும் குரு சங்கர மஹா பெரியவா - இச்
ஜெகம் காக்கவந்த குரு மஹா பெரியவா
ஜெகந்நாத ஜெகதீஸ மஹா பெரியவா - ஞாலம் போற்றும்
ஜெகத் குருவே அனுஷநாத மஹா பெரியவா

வைகறையின் ஆதிஜோதி மஹா பெரியவா - நல்
வைகாசி அனுஷம் உதித்த மஹா பெரியவா
வைகை தந்த சொக்கநாத மஹா பெரியவா- இவ்
வையகம் தழைக்கச் செய்யும் மஹா பெரியவா

மலையெங்கும் அருள்சிவமே மஹா பெரியவா - மா
மலைஉறையும் கயிலைநாத மஹா பெரியவா
மலை எனவே நம்பிடவே மஹா பெரியவா - மனம்
மலைத்திடவே அருள்பொழிவார் மஹா பெரியவா



## பாவம் போக்கும் பரமேஸ்வரன்
## காஞ்சி மஹாபெரியவா கானம்

### (மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே - மெட்டு)

ஷண்மத குருவே சங்கர குருவே
ஷண்முக சிவமே ஆலடி தவமே
ஷண்முக ஸ்வாமி நாத சங்கர குருவே
ஷண்மத காஞ்சியில் அமர்ந்தருள் குருவே



பஞ்சா க்ஷரனே ஷடா க்ஷரனே
பஞ்சமா பாவங்கள் போக்கிடும் ஹரனே
பஞ்சேந்திரியம் தனைஅடக்கிட அருள்வீர்
பஞ்சாம்ருத ப்ரிய குரு ஸ்வாமி நாதனே

சதுர்யுக நாதனே கயிலை நாதனே
சதுர்முகன் ஹரியும் பணிந்திட்ட ஹரனே
சதுர்த்தி நாதனாய் அமர்ந்தருள் பரனே
சதுர்வேதம் காத்திடும் அனுஷத்தின் நாதனே



மும்மூர்த்தி திருவே மூவிரு கரத்தனே
முக்கண் முதல்வனே முன் வந்தருள்பவா
த்வைதம் அல்ல ஏகம் என்றவா
ஏகாம்பர தலம் அமர்ந்தருள் குருபரா

## வேத நாத வைத்திய நாத

## அனுஷ நாத சங்கர கானம்

### (நாதவிந்துகலாதி நமோ நம - மெட்டு)

வேதம் நான்கினை காத்திட வந்தவா
பாதம் நோக எங்கும் நடந்தவா
கீதம் பாடியே பதம் பணிந்தோமே மஹா ஸ்வாமி

சந்திர மௌலீஸ்வர சுந்தர திருவே
சாந்தமாய் அமர்ந்தருள் ஆலடி குருவே
சந்திர சேகர இந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமி

அத்ரி புத்ரனே மும்மூர்த்தி திருவே
அத்வைதம் உணர்த்திட வந்திட்ட குருவே
அதர்மம் உணர்த்தியே தர்மத்தை போதித்த மஹா ஸ்வாமி

கலவையின் குருவேகாருண்ய சங்கரா
காலடி குருவே காம கோடி சங்கரா
கலங்கி வந்தோர்க் கருள் திருக்காஞ்சி சங்கரா மஹா ஸ்வாமி

பற்பல நாமம் கொண்டருள் சங்கரா
பற்றில்லா மனமருள் ஜெகத்குரு சங்கரா
பற்றிய வினை தீர்த்தருளும் சங்கரா மஹா ஸ்வாமி



## வேதநாத வைத்தியநாத
## அனுஷ நாதசங்கர கானம்

### (நாதவிந்து கலாதி நமோ நம - மெட்டு)



வேதம் நான்கினை காத்திட வந்தவா
பாதம் நோக எங்கும் நடந்தவா
கீதம் பாடியே பதம் பணிந்தோமே மஹா ஸ்வாமி

சந்திரமௌலீஸ்வர சுந்தர திருவே
சாந்தமாய் அமர்ந்தருள் ஆலடி குருவே
சந்திரசேகர இந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமி

அத்ரிபுத்ரனே மும்மூர்த்தி திருவே
அத்வைதம் உணர்த்திட வந்திட்ட குருவே
அதர்மம் உணர்த்தியே தர்மத்தை போதித்த மஹா ஸ்வாமி

கலவையின் குருவே காருண்ய சங்கரா
காலடிகுருவே காம கோடி சங்கரா
கலங்கி வந்தோர்க் கருள் திருக்காஞ்சி சங்கரா மஹா ஸ்வாமி

பற்பலநாமம் கொண்டருள் சங்கரா
பற்றில்லா மனமருள் ஜெகத்குரு சங்கரா
பற்றிய வினைதீர்த் தருளும் சங்கரா மஹா ஸ்வாமி

## சங்கரானந்தம் 25

மஹா பெரியவாளின் பேரருளால் 1000-ற்கும் மேற்பட்ட சங்கரானந்த கானங்கள் மலர்ந்து தங்களின் கரங்களில் இன்று இந்த 25வது தொகுப்பு மஹா ஸ்வாமியின் அருட் பிரசாதாமாக தங்களை வந்தடைந்துள்ளது.

இப்பாடல்களை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எளிதில் புரிந்து மனமாரபாடி மகிழும் வகையில் எளிய சொற்களால் மஹா பெரியவா அடியேனை எழுத வைத்துள்ளார்.

இப்பாடல்களை அனுஷம் தோறும் குருவாரம் தோறும் பாடி அகமகழிந்து அத்வைத குருவின் அருளை பெறலாம். இப்பாடல்களின் ஆடியோவை பெற்றிட அடியேனுடன் whatsapp group-ல் இணைந்து கொள்ளவும்.

அனுஷ பூஜை செய்பவர்கள், பக்திப் பாடல்களை மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கும் பாட்டு டீச்சர்கள் ஆகியோர் தங்களது முகவரியை தெரிவித்தால் அடியேன் தங்களுக்கு தேவையான அளவு பிரதிகளை தபாலில் அனுப்பிவைக்க கடமைப் பட்டுள்ளேன்.

மஹா பெரியவாளின் மஹிமைகளை மனதார பாடி மகிழ்வோம்
மஹா பெரியவாளின் பேரருள் பெற்று பெருவாழ்வு வாழ்வோம்
பெரியவா சரணம்..

இவண்,
தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்
99404 47 437

### சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 1200 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 24 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக 2,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹா பெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. அடுத்து சங்கரானந்தம் - தொகுப்பு 25 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.


ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து , திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:
ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:
ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:





ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸூர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:





ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌளீஸ்வர பூஜாப்ரியாய நம:



இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.







பாதக மலங்களை போக்கும்

பாத கமலங்களை பணிவோம்

# சங்கரானந்தம்-25

## 16.12.2025



